கழக வெளியீடு—௩௭௦

பல நாட்டுச் சிறு கதைகள்

ஓஓ

செல்வி குஞ்சிதமணி
எழுதியது

ஓஓ

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி :: சென்னை

பதிவு செய்தது] தாரண—ஐப்பசி [விலை அணா 6

முதற் பதிப்பு
நவம்பர் 1944

பதிப்புரை

இதன்கண்
பல நாட்டுச் சிறு கதைகளிலிருந்து பொறுக்கி யெடுத்த நான்கு கதைகள் அடங்கியுள்ளன. இவற்றைச் சிறந்த தமிழ் எழுத்தாளரான திருவாளர் காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை அவர்களின் புதல்வி செல்வி குஞ்சிதமணி அம்மையார் ஆங்கிலத்திலிருந்து எளிய இனிய தமிழ் நடையில் மொழி பெயர்த்துத் தந்திருக்கின்றனர்.

—கழகம்.

The Progressive Printers, G. T., Madras.

க. கை - கை - கோ

[ஒரு போர்னியோத் தீவுச் சிறுகதை]

“மணி ஆறாகிவிட்டது. எழுந்து ஓடுங்கள் வயலுக்கு, சோம்பேறிக் கழுதைகளா!” என்று அதட்டினான் கிழவன்.

விடை ஒன்றும் கூறாமல் உடன்பிறந்தவர்களான மூன்று பெண் குழந்தைகளும் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து வெளியே ஓடினர்.

பாவம்! அந்தக் குழந்தைகளுக்குத் தாயும் இல்லை, தந்தையும் இல்லை. இறந்துபோன தந்தையின் உடன் பிறந்தவனான பேராசை பிடித்த இந்தக் கொடிய கிழவன் ஒருவன்தான் அவர்களுக்குத் தெரிந்த உறவினன். வினைத்தெரிந்த நாள்முதல் அவனுடைய ஆதரவிலேதான் இவர்கள் வளர்ந்து வந்திருக்கிறார்கள். உலகமக்களெல்லாம், ஒரு நாளைக்கு ஒரே வேளை, அதுவுங் கால் வயிற்றிற்குப் போதவும் போதாமலும் உண்டு வருகின்றனர் என்றே இந்தக் குழந்தைகள் நம்பினர். ஏன்? இவர்களுக்கு அந்தக் கிழப் பாவி ஒரு நாளைக்கு ஒரு வேளைச் சோறே அளித்துவந்தான்; அதுவும் ஒரு குழந்தைக்குப் போதிய உணவையே மூவர்க்கும் அளித்துவந்தான்.

மூன்றும் குழந்தை :— அக்கா! என்றுமில்லாமல் இன்றைக்கு என்னவோ எனக்குப் பசி மிகுதியாக இருக்கின்றது. கைகால்கள் ஓய்ந்து வருகின்றன. சிற்

றப்பா, நடுப்பகலில் உணவு கொண்டுவருகிற வரையில் என்னால் தாங்க முடியாது போலிருக்கிறது. நான் வயல் வேலையை எப்படிச் செய்யப்போகிறேன்?

இரண்டாம் குழந்தை:—கண்ணே! வருத்தப்படாதே; விடியற் காலையில் எழுந்து பல்லைத் துலக்கிவிட்டாய்; வெறும் வயிற்றுடன் உச்சிப்பொழுது வரையில் சோற்றுக்குக் காத்திருப்பதென்றால் உன்னால் எப்படி முடியும்? என்னாலேயே முடியவில்லையே!

முதல் குழந்தை:—கண்மணிகளே, நீங்கள் இருவரும் இன்று ஒன்றும் செய்யவேண்டாம். மரத்தடியில் உட்கார்ந்திருங்கள். உங்கள் வேலையை நான் செய்துகொள்கிறேன்.

உச்சிப்பொழுது வந்தது; சோறு கொண்டுவந்த கிழவன் இரண்டு குழந்தைகள் மரத்தடியில் படுத்திருப்பதையும் மூத்த பெண்மட்டும் வேலை செய்துகொண்டிருப்பதையும் கண்டான்; கோபம் கொண்டான்; "சோம்பேறிக் கழுதைகளா? தின்று தின்றுவிட்டு மரத்தடியில் உறங்குகின்றீர்களா? வேலைக்கு அஞ்சினால் சோறு எப்படிக்கிடைக்கும் என்று நினைத்தீர்கள்? நாளை முதல் நீங்கள் வேலை செய்யாமல் இருக்கக் கண்டால் உங்களைப் பட்டினி போட்டுவிடுவேன்!" என்று அதட்டிக் கூறினான். நடுநடுங்கிய குழந்தைகள் ஒன்றும் பேசவில்லை. கிழவன் சோற்று மூட்டையைக் கீழே வைத்துவிட்டுப் போய்விட்டான்.

கிழவன் கூறிய கொடிய சொற்கள் அந்த மரத்தில் உறைந்துவந்த ஒரு தெய்வத்தின் காதுகளில் விழுந்தன. ஆதரவற்ற அச் சிறுகுழந்தைகளின்மேல் அதற்கு இரக்கமுண்டாயிற்று. கை - கை - கோ என்ற ஒரு பறவையின் உருக்கொண்டு அஃது அம் மரக்கிளை யொன்றில்

வந்து அமர்ந்தது; குழந்தைகள் வேலையை விட்டு வீடு திரும்புகிற வரையில் அந்த இடத்தைவிட்டு அது நகரவே யில்லை. வேலை முடிந்தது; வயலை விட்டுக் குழந்தைகள் மேலேறி, வீட்டுக்குப் புறப்பட்டன. பறவை கிளையை விட்டுத் தத்தித்தத்திக் கீழிறங்கி அவர்கள்முன் வந்தது.

மூன்றும் குழந்தை:— அக்கா! என்ன அழகான பறவை!

முதற் குழந்தை:— கை-கை-கோ! எங்கே, என்னிடம் வா பார்க்கலாம்!

அவள் சொல்லி வாய் மூடுமுன் பறவை பறந்து வந்து அவள் தோள்மீது உட்கார்ந்து கொண்டது.

முதற் குழந்தை:—என்னோடு வீட்டிற்கு வருகிறாயா?

பறவை:—கை-கை-கோ கீச்!


மூன்றும் குழந்தை:—அக்கா! அது வருகிறேனென்று சொல்கின்றது.

அடங்கா மகிழ்ச்சியுடன் குழந்தைகள் பறவையை எடுத்துக்கொண்டு வீடு சென்றன; பழைய கூடு ஒன்றைத் தேடிப் பிடித்து அதனுள் அப் பறவையை அடைத்தன; அண்டையிலிருந்த பழங்கள் சிலவற்றைப் பறித்து அப் பறவைக்குக் கொடுத்தன. தங்களுக்குக் கிடைக்கும் கால் வயிற்றுச் சோற்றில் ஒரு சிறு பகுதியையும் அதற்குக் கொடுத்தன.

ஆதரவற்ற அந்த எளிய குழந்தைகளிடம் அப் பறவை மிகவும் செல்வமாகவே வளர்ந்து வந்தது. மாலை நேரங்களில் குழந்தைகள் வேலையை விட்டு வீட்டிற்குத் திரும்பி வந்ததும் பறவை கூட்டினுள் குதித்துக் குதித்

துக் கூத்தாடித் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும். குழந்தைகளும் ஒன்று மாற்றி ஒன்று, 'கை - கை - கோ!' என்று பறவையைக் கூவியழைத்தபடியே இருக்கும். வீட்டில் பொழுதுபோவது அவர்களுக்குத் தெரியாம லிருந்தது. கவலைக் கடலிலிருந்து ஒருசிறிது கரை ஏறி வந்தனர் என்று சொல்லலாம்.

நிறைநிலா நாள்! நிலவு பால்போலக் காய்ந்தது. குழந்தைகள் அயர்ந்து தூங்கின. யாரோ அவர்களைக் கூப்பிடுவதுபோலிருந்தது. மூத்த பெண் விழித்துக் கொண்டாள். அழைத்த குரல் கூட்டிலிருந்து வருவது



போல் அவளுக்குத் தோன்றிற்று. என்ன கனவா? அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள். மறுபடியும் பறவைக் கூட்டிலிருந்து ஓசை பிறந்தது. ஓசையோ கேட்கக் கேட்க இனிமையாக இருந்தது; இருந்தாலும் ஒன்றும் பொருள் விளங்கவில்லை.

"கை - கை - கோ! நீ என்னையா அழைத்தாய்," என்று கேட்டாள் பெண்.

"ஆம்! நல்ல நிலாக் காலத்தில் நான் பேசுவது வழக்கம்," என்றது பறவை.

"அப்படியா! மகிழ்ச்சி கொண்டேன், உனக்கு, என்ன வேண்டும்?"

"என் கூட்டருகே வா! சற்று வா!"

பெண் படுக்கையை விட்டு எழுந்து கூட்டருகே சென்றாள்.

"கூட்டைத் திறந்து விடு; நான் போகவேண்டும்," என்று பறவை தன் இனிய குரலில் கூறிற்று.

"என்ன! எங்களை விட்டுவிட்டா போகிறாய்? உன்னைப் பிரிந்து நாங்கள் எப்படி இருப்போம்?" என்று கூறிய பெண்ணின் கண்களில் நீர் தாரை தாரையாக வடிந்தது. இருந்தாலும் பறவையின் வேண்டுகோளை மறுக்க அவளுக்கு மனம் வரவில்லை; கூட்டைத் திறந்துவிட்டாள் பெண். பறவை வெளியே வந்தது.

"குழந்தாய்! உன் உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன். நீங்கள் இந்த வீட்டில் படும்பாட்டை நான் நன்றாக அறிவேன். பாவம்! கால் வயிற்றுச் சோற்றுக்குக் கூட உன்னைப் பிடி என்னைப் பிடி என்றிருக்கிறது. இன்று முதல் நீ ஒன்று செய்! ஒவ்வோர் இரவிலும் நீ படுக்கப் போகுமுன் இரண்டு வெறும் பானைகளைத் துப்புரவாகக் கழுவி மூடியிட்டு அடுப்பங்கரையில் ஒரு மூலையில் வை! அது நிறையச் சோறும் கறியும் கிடைக்குமாறு நான் செய்கிறேன். உங்களுக்குச் சோற்றுக் கவலை இனி வேண்டாம்! நீங்களும் வயிறார உண்ணலாம்; இன்னும் சில குழந்தைகளும் சேர்ந்துண்ணலாம்.

அஞ்சாதீர்கள்!" என்று கூறிய பறவை விரிச்சென்று சன்னல்வழியே பறந்து போய்விட்டது.

"ஆ! போய்விட்டாயா, சரி போய் வா," என்று வருத்தத்துடன் கூறிய முதற்பெண், பறவை கூறிய படியே இரண்டு பானைகளைக் கழுவி அடுப்பங்கரையில் வைத்துவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டாள். பொழுது விடிந்தது. படுக்கைவிட்டு எழுந்த பெண்கள் கூட்டில் பறவையைக் காணவில்லை.

மூன்றும் பெண் :—எங்கே கை - கை - கோ?

இரண்டாம் பெண் :—ஐயோ! அது பறந்து போய் விட்டதா?

முதற் பெண் :—ஆம், பறந்துதான் போய்விட்டது.

குழந்தைகளுக்குத் துக்கம் நெஞ்சை யடைத்தது. கண்களில் நீர் ததும்பியது.

மூன்றும் பெண் :—ஐயோ! பசிக்கிறது!

இரண்டாம் பெண் :—எனக்குக் கூடப் பசி மிகுதியா யிருக்கிறது.

முதற் பெண் :—எனக்கும் பசி மிகுதியாய்த்தான் இருக்கிறது. ஆ! சற்றுப் பொறுங்கள். எங்கிருந்தோ உணவு வாடை வருகிறது!

மூவரும் எழுந்து அடுப்பங்கரைக்குச் சென்றனர்; மூலையிலிருந்த பானைகளில் மணத்தோடு சூடிய புதிய சோறும் கறியும் நிறைந்திருக்கக் கண்டனர்.

"அக்கா! இஃது இங்கு எப்படி வந்தது?" என்று இரண்டு இளைய குழந்தைகளும் ஆவலுடன் கேட்டனர்.

"கை - கை - கோ, அனுப்பியிருக்கிறது," என்று

பதில் உரைத்த மூத்த பெண் முதல் நாளிரவு நடந்த நிகழ்ச்சியை தங்கைமாரிருவருக்கும் விளக்கிக் கூறினாள்.

அன்றுமுதல் குழந்தைகளுக்கு உணவுக் கஷ்டமே கிடையாது. காலையிலும், மாலையிலும் வேண்டும் வேண்டா என்ற அளவுக்குச் சோறும் கறியும் கிடைத்தன. நாளாவட்டத்தில் குழந்தைகள் உடல் தெளிந்து அழகு மிகுந்தனர்.

கை - கை - கோ தவறாமல் ஒவ்வோர் இரவிலும், மாலையிலும் வீட்டிற்கு வந்து போகும். சில சமயங்களில் குழந்தைகள் இருப்பார்கள்; சில சமயங்களில் இருக்க மாட்டார்கள்; கை - கை - கோ மட்டும் தவறாமல் வந்து பானைகளை நிரப்பிச் செல்லும். மூவரும் வயிறார உண்டும், உணவு மிஞ்சி இருப்பதைக் கண்ட குழந்தைகள் அக்கம்பக்கத்திலிருந்த ஏழைக் குழந்தைகள் சிலரைக் கூப்பிட்டு உணவளித்து வந்தனர்.

வேண்டிய அளவிற்குமேல் குழந்தைகளுக்கு உணவு கிடைத்துவருகிற செய்தி கிழவன் காதுகளுக்கு எட்டிற்று. யார் அவ்வாறு அவர்களுக்கு உணவு அளித்து வருகிறார்கள் என்று அவன் அவ்வூரிலுள்ள பலரைக் கேட்டான். 'நானில்லை, நானில்லை' என்ற பதிலே கிடைத்தது. கிழவன் நேரே வீட்டிற்கு வந்தான். மூத்த பெண்ணைக் கூப்பிட்டான். "யார் உங்களுக்கு இவ்வளவு சோறு போடுகின்றார்கள்?" என்று கேட்டான். கை - கை - கோ உணவளித்து வரும் முறையையும், போதிய அளவிற்குமேலும் உணவு மிஞ்சியதால் ஏழைக் குழந்தைகளுக்கு அவர்கள் உணவளித்து வருவதையும் பெண் விளக்கிக் கூறினாள்.

கிழவனுக்கு மனவெரிச்சல் தாங்கவில்லை. ஒன்றும் உரையாமல் வெளியே சென்றான். தன்னுடைய கை

யாள் ஒருவனைக் கூப்பிட்டு, "இன்று மாலை அந்தப் பறவை வீட்டிற்குள் வரும்பொழுது அதைப் பிடித்து என்னிடம் கொண்டுவா!" என்று கட்டளையிட்டான்.

அன்று மாலை அவ்வாறே பறவை பிடிக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டது. கிழவன் அதை ஒரு கூட்டிலடைத்து வைத்து, "இன்று முதல் நீ எனக்குத்தான் சோறு கொண்டுவரவேண்டும்! என் அடுப்பங்கரை மேலண்டை மூலையில் இரண்டு பானைகளைக் கழுவி வைத்திருக்கிறேன்" என்று கூறினன். மறுநாள் பொழுது விடிந்ததும் விடியாததுமாகக் கிழவன் எழுந்து ஓடிப் பானைகளைப் பார்த்தான்; பானைகள் வெறும் பானைகளாகவே இருக்கக் கண்டான். சினம் மிகுந்தது. நேரே பறவை இருந்த கூட்டிற்கு வந்தான். பறவையை வெளியே எடுத்து அதன் கழுத்தை ஒரே திருகாகத் திருகிக் கொன்ருன்; இறந்த பறவையை அடுப்பிலிட்டுச் சுட்டுத் தின்றுவிட்டு இறகுகளையும், எலும்புகளையும் கொல்லையில் எறிந்துவிட்டான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. மூத்த பெண் கிழவனிடம் வந்தாள். "சிற்றப்பா! எங்களுக்கு முன்போல் உணவு கிடைக்கவில்லை. ஆகையால் உங்கள் கையாள் திருடிவந்த கை - கை - கோவை உடனே திருப்பிக் கொடுங்கள்!" என்று பணிவுடன் கேட்டாள்.

"ஓ! கை - கை - கோவா! அஃது என் வயிற்றிற்குள் சென்று இரண்டு நாட்களாயின! வேண்டுமானல் அதன் இறகுகளும் எலும்புகளும் கொல்லைப் புறத்தில் கிடக்கும்; போய்ப் பொறுக்கிக்கொள்!" என்று கிழவன் கடிந்து கூறிவிட்டு வெளியே சென்ருன்.

பெண் அழுதுகொண்டே கொல்லைப்புறம் சென்ருள்; எலும்புகளையும், இறக்கைகளையும் பொறுக்கிக்

கொண்டாள்; அழுதுகொண்டே வீட்டிற்குத் திரும்பி வந்து தங்கைகளிடம் நடந்ததைச் சொன்னுள். மூவரும் வருத்தத்துடன் அந்த எலும்புகளையும் இறகுகளையும் வீட்டருகில் ஓரிடத்தில் பரிவுடன் புதைத்து வைத்தனர்.

மறுநாள் பொழுது விடிந்தது. குழந்தைகள் பறவை எலும்பைப் புதைத்த இடத்தைப் பார்க்கச் சென்றனர். என்னவிந்தை! உயர்ந்து ஓங்கிய அழகான ஒருமரம்அந்த இடத்தில் முளைத்திருந்தது. பூக்களும் பழங்களும் மரத்தில் நிறைந்திருந்தன. மகிழ்ச்சி கொண்டு மூவரும் அந்த மரத்தில் ஏறினர்: பழங்களைத் தின்று பார்த்தனர்; ஒவ்வொன்றும் சுவை மிகுந்ததாய் இருக்கக் கண்டனர். ஆனல், ஒவ்வொரு பழத்தைப் பறிக்கும் போதும் கை - கை - கோ கூவுவது போல் ஓர் ஒலி பிறக்கக் கண்டனர்; அதனுல், கை - கை - கோ தான் இம் மரத்தில் தெய்வமாக உறைந்திருக்கிறதென்று கண்டு கொண்டனர்; கை - கை - கோ இருக்கும் வரையில் தங்களுக்கு யாதொரு விதமான கேடும் நேராது என்று அவர்கள் ஆறுதலடைந்தனர்.

மூன்ரும் பெண் ஒரு பூவைப் பறித்தாள். அதிலிருந்து ஒரு நன்முத்து தெறித்து அவள் கையில் விழுந்தது. மகிழ்ச்சியுடன் அதைத் தன் தமக்கைமார்களிடம் அவள் காட்டினுள். அவர்களிருவரும் அவ்வாறே வேறு இரண்டு பூக்களைப்பறித்துப் பார்த்தனர். அவர்களுக்கும் ஆளுக்கொரு முத்துக் கிடைத்தது.

"எல்லாப் பூக்களிலும் முத்து இருக்கிறதா என்று பார்ப்போம், வா!" என்ருள் மூத்த பெண்.

அப்பொழுது மரத்திலிருந்து கை - கை - கோவின் குரல் கேட்டது: "குழந்தைகாள், ஒவ்வொரு நாளும் உங்களுக்கு வேண்டுமளவிற்கு உணவும் செல்வமும்

கொடுத்து வருவேன், அஞ்சாதீர்கள்! உங்களுக்கு நல்ல நண்பர்களும் கிடைப்பார்கள்.''

அதுமுதல் ஒவ்வொரு நாளும் மரத்தின் பூக்களிலிருந்து தவறாமல் மூன்று முத்துக்கள் கிடைத்து வந்தன. விரைவில் குழந்தைகள் மூவரும் பணக்காரரானார்கள்.

விந்தை பொருந்திய அம்மரத்தின் செய்கை அரசன் காதுகளுக் கெட்டிற்று குழந்தைகளிடம் இருக்கும் முத்துக்களைக் கொடிய கிழவன் பிடுங்கிக் கொள்வானோ என்று அரசன் அஞ்சினான்; அவ்வாறு நேராமல் தடுக்கக் கருதினான்; குழந்தைகளுக்குத் துணை போயிருக்குமாறு அன்பு நிறைந்த ஒரு கிழவியை அனுப்பி வைத்தான். கிழவி வந்தது முதல் கிழவன் தொல்லை ஒழிந்தது; சீரும் செல்வமும் நிறைந்து அவர்கள் செழிப்புடன் வளர்ந்துவந்தனர்.

உ. காலன் சென்ற வழி

[ஒரு பஞ்சாப் நாட்டுச் சிறுகதை]

அகன்று செல்லும் நெடுஞ்சாலை. இருபுறங்களிலும் மரங்களடர்ந்து இருளோவென்றிருக்கும் அச்சாலையின் வழி எவரும் நடப்பதில்லை. அதன் வழியே செல்பவர்கள் பாம்பு கடித்தோ தேள் கொட்டியோ இறந்து விடுவார்கள் என்று கூறுவர்; சென்றவர்கள் திரும்பியது இல்லை என்பதுமட்டும் உறுதி.

ஒருவரும் செல்லா அந்தச் சாலையில், வயது சென்ற முதியோன் ஒருவன் ஒருநாள் சென்றுகொண்டிருந்தான். வெயிலின் சூடு மிகுந்தது. அலுத்துக் களைத்துச், சாலை யோரத்தில் கிடந்த கல்லொன்றின்மேல் அவன் உட்கார்ந்தான். சிறிது பொழுது கழிந்தது. சட்டென்று அவன்முன் சிறிது தொலைவில் ஓர் உருவம் தென்பட்டது. தேளைப்போல் தோன்றிய அஃது, ஒரு சேவலவ்வளவு பருமனுடையதாக இருந்தது. அஞ்சத்தக்க அந்த உருவம் மெல்ல மெல்ல முன்னே செல்லத் தொடங்கிற்று. வியப்பு மிகுந்தவனாய், தன் களைப்பையும் மறந்து, முதியோன், அதன் பின்னே தொடர்ந்தான். ஆ! எங்கே அந்தப் பெரிய தேள்? தேள் சென்ற இடத்தில் ஒரு பாம்பு அன்றோ ஊர்ந்து செல்கிறது! கிழவனும் விடாது நிழலைப்போல் அதைப் பின் தொடர்ந்தான்.

அதோ தெரிவது என்ன கட்டிடம்? ஓ! ஒரு சாவடி போலும்! உச்சிப்பொழுது உணவு உண்டபின் பலர் சாவடித் திண்ணையில் படுத்து உறங்கினர். கொடிய அந்நாகம் மெல்லச் சுவரோரமாகத் திண்ணைமேல் ஏறிற்று; படுத்திருந்தவர்களிற் சிலரைச் சினமுடன்

தீண்டிவிட்டுக் கீழிறங்கிச் சென்றது. அந்தோ! தீண்டப்பட்டோர் துடிதுடித்து மாண்டனர். வருத்தம்! வருத்தம்! கிழவன் விடவில்லை; நிழல்போல் பின் தொடர்ந்தான்.

பெரியதொரு நகரம்; அழகாக அமைந்த தெருக்கள்; வானை யெட்டும் மாடமாளிகைகள். நடுவே மிளிர்வது அரசன் அரண்மனை! என்ன? பாம்பு அரண்மனைக்குள் அன்றோ செல்லுகிறது! பின்தொடர்ந்த முதியோன் அரண்மனையின் வெளிப்புறத்தில் நின்றுகொண்டான். சற்று நேரத்தில் அரண்மனையுள் பெருங்கூச்சல். அரண்மனை மக்கள் அல்லோல கல்லோலமாய் அங்குமிங்கும் ஓடினர். அரசன் பாம்பு தீண்டி இறந்தானும் ....தண்ணீர்க் குழாயைத் திறந்த அவனுடைய சிறு பெண்ணும் குழாய்வழி வந்த ஒரு பாம்பினால் கடியுண்டு இறந்தாளாம்! திகைப்பு மேலிட்டவனாய்க், கிழவன் ஒன்றும் தோன்றாது நின்றுகொண்டிருந்தான். ஆ! அதோ பாம்பு முன்னே போகிறது. கிழவனும் விடாது நிழல்போல் அதைப் பின்தொடர்ந்தான்.

சாலை முடிந்து விட்டதா என்ன! குறுக்கே பெரியதோர் ஆறு ஓடுகின்றது. அதைக் கடக்கப் பாலமுமில்லை; படகும் இருப்பதாகக் காணவில்லை. இக்கரையில் ஐந்துபேர் ஆற்றைக் கடக்க வகைதெரியாது கலங்கி நிற்கின்றனர். அந்நிலையில் ஆற்றோரம் வரையில் சென்ற பாம்பு சட்டென அழகியதோர் எருமை மாடாக மாறிற்று. எருமை பருத்துக் கொழுத்து மழமழவென்றிருந்தது. அதைக் கண்ட ஐவரும், "ஓகோ! எருமை ஆற்றைக் கடக்கப்போகிறது. நாமும் அதன்மேல் ஏறிக்கொண்டால் எளிதிற் செலவில்லாமல் அக்கரை சேர்ந்து விடலாம்," என்று பேசி முடிவுகட்டினர். அதன்படி, மூவர்எருமையின்மேல் ஏறிக்கொண்டனர்; இருவர் அதன் வாலைப் பிடித்துக்கொண்டனர். எருமை சரசர என்று

நீரில் இறங்கி நீந்திச் சென்றது. அதன் கண்களில் தன் காரியம் நிறைவேறியதைத் தோற்றுவிக்கும் வெற்றி ஒளி வீசிற்று. ஆற்றின் நடுவே வந்ததும் விசையுடன் அது தன் கால்களை உதைத்துக்கொண்டது; தன் பருத்த உடலை நெளித்துச் சுளித்து அசைத்தது. பாவம்! ஐவரும் ஆற்றோடு சென்றனர். அவர்கள் அலறிய



அலறலும் நின்றது; மூழ்கி இறந்துவிட்டனர் போலும். வருத்தம்! வருத்தம்! ஒன்றையும் அறியாததுபோல் மாடு நீந்தி அக்கரை சென்றது. அச் சமயம் அங்கே வந்த படகொன்றில் கிழவன் ஏறி விரைந்து அக்கரை சேர்ந்தான்.

அக் கரை சேர்ந்த கிழவன் அங்கே எருமையைக் காணவில்லை; எருமை இருந்த இடத்தில் எருதொன்று மேய்ந்து கொண்டிருக்கக் கண்டான். மதுரையில் அமணர் விடுத்த மாயப் பசுவை வதைக்கத் தோன்றிய தெய்வக் காளையின் அழகும் அமைப்பும் இதன் அழகையும் அமைப்பையும் விடச் சிறந்தன

ஆகுமோ! ஆற்றல் மிகுந்த அந்த எருது மிக்க அமைதி யுடையதாகக் காணப்பட்டது. எனவே, அருகில் உழுது கொண்டிருந்த உழவனொருவன் 'கண்டேன், கண்டேன்' என்று அதை ஓட்டிக் கொண்டு சென்று தன் வீட்டின் பின்புறமுள்ள கொட்டகையிலிருந்த மாடுகளோடு மாடாகக் கட்டி வைத்தான். இரவுப்பொழுது வந்ததும், அழகிய புதுக் காளை மீண்டும் பாம்பாக மாறியது; மாறி, அங்கிருந்த மாடுகளை யெல்லாம் கடித்தது; பின் வீட்டினுட் சென்று உழவனையும், உழவன் குடும்பத்தாரையும் ஒருவர் விடாமல் தீண்டிவிட்டு, இருளில் விரைந்து வெளியில் சென்றது. விடவில்லை கிழவன்; இருளிலும் நிழல் போல் பின்தொடர்ந்தான்.

பொழுது விடிந்தது. வனப்பு மிகுந்த இளமரச் சோலை ஒன்று சாலை யோரத்தில் காணப்பட்டது. அச் சோலை நடுவே சிறு குளம் ஒன்று. அதன் கரையை அடைந்ததும் பாம்பு அழகிய இளமங்கையாக மாறிற்று. வகை வகையான அணிகள் அம் மங்கையின் உடலெல் லாம் பளிச்சிட்டன. கட்டியிருந்த சேலை கண்ணைக் கவர்ந்தது. அழகே உருவாய்த் திரண்டு அமைந்த அந்த இளமங்கை கீழே உட்கார்ந்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அச்சமயம், அவ்வழியே உடன்பிறந் தார் இருவர் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் உடை யும் நடையும் இருவரும் போர்வீரர் என்று தெரிவித்தன. எல்லையற்ற பெருவெளியின் நடுவே காணப்பட்டதோர் எழிற்சோலையில் இளமங்கை ஒருத்தி இருந்து அழு வதைக் கண்ட அவர்களுக்கு வியப்பு மேலிட்டது. மங் கையை அணுகினர் இருவரும்; "அழுவதேன்?" என் றான் மூத்தவன்.

"ஐயன்மீர்! நீங்கள் கேட்டு என்ன செய்யப் போகின்றீர்கள்?"

"ஏன் எங்களால் ஆன உதவியைச் செய்வோம், அஞ்சாமற் சொல்!"

"என்ன சொல்வேன். என்னுடன் வந்த என் கணவர் அதோ தெரியும் ஆற்றில் நீரருந்த இறங்கினார். முதலை பற்றிற்று; ஆற்றில் மூழ்கி இறந்தார். செய்வ தறியேன்; அலறினேன், அரற்றினேன்; வழியொன் றும் காணேன். எனக்கு உறவினரோ, நட்பினரோ எவரும் இல்லை. இடமகன்ற இப் பெரிய உலகில் நான் ஒருத்தி ஆதரவு அற்றவள்........"

"அஞ்சாதே! சம்மதமானல் நான் உன்னை என் மனைவியாக ஏற்றுக்கொள்ளுகிறேன். கவலை யொழி! என்ன சொல்கிறாய்?"

"வேறு வழியில்லாத எனக்கு இதைவிட வேறு உதவியும் வேண்டுமோ? என்றாலும் ஒன்று நான் கூற வேண்டும். பிறந்த நாள் தொட்டு இதுகாறும் நான் எந்த வேலையும் செய்தறியேன். ஆகையால் வீட்டு வேலை செய்யும்படி என்னை வற்புறுத்தக் கூடாது. அன் றியும், நான் ஏதாவது ஒன்றை விரும்பிக் கேட்டால் இல்லை என்னமல் வாங்கித் தரவேண்டும்."

"இவ்வளவுதானே! ஒத்துக்கொள்கிறேன். சரி. புறப்படு!"

"என்னைப் பசி வாட்டுகிறது. கனிகள் ஏதேனும் உடனே பறித்து வாருங்கள்!"

'அடித்தேன் பரிசு,' என்று மூத்தவன் கனி கொணர விரைந்து சென்றான். அவன் சென்றதும் அம் மங்கை இளையவனைப் பார்த்து, "ஏன்? என்னை மணக்க உமக்கு விருப்பமில்லையா? அவரைவிட உம் மையே நான் பெரிதும் விரும்புகிறேன். உடனே நாம் இருவரும் புறப்பட்டு இக் குறுக்கு வழியே சென்றுவிடு வோம் வாரும்," என்று அழைத்தாள்.

"சிவ, சிவா! இத்தகைய சொற்களை என் காதிற் போடவேண்டா. எப்பொழுது என் அண்ணன் உம்மை மனைவியாக ஏற்றுக்கொள்வதாகக் கூறினரோ அப் பொழுது முதல் உம்மை என் அண்ணியாராகவே கருது கிறேன். ஆகையால் என் உயிர் போனாலும் நான் உம் விருப்பத்திற்கு இணங்கேன்," என்றான் அறச்செல்வன்.

"கூ கூ; குய்யோ, முறையோ!" என்று அழத் தொடங்கினாள் அவ்வஞ்சகி. நொடிப்பொழுதில் மூத்த வன் திரும்பி ஓடோடி வந்தான்; "என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான். "நான் சூது வாது அறியாதவள். இவரை உம் உடன்பிறந்தார் என்று நம்பி ஏமாற்றம் எய்தினேன். நீர் அப்புறம் சென்ற தும், இப்புறம் இக் கசடன், 'அவனென்ன உன்னை மணப்பது? நான் இளையவன்; அழகிலும் ஆண்மை யிலும் அவனைவிடச் சிறந்தவன். உன் அடிமையிலும் அடிமையாக நடந்துகொள்வேன். நீ உன் சம்மதத்தைத் தெரிவித்தால், என் அண்ணனை ஒரே வெட்டில் வெட் டிப் போட்டுவிடுகிறேன். என்ன சொல்கிறாய்?' என்று அச்சுறுத்தினான். எங்கே உம்மைக் கொன்றுவிடு வானே என்று அஞ்சி நான் மீண்டும் அழுதேன்," என்று கதை கட்டினாள்.

அவ்வளவுதான். "வஞ்சகா! என்னையோ நீ கொல் வாய்! எங்கே, எடு கத்தியை!" என்று மூத்தவன் தன் கத்தியை உருவினான்.

"பெண்பித்துப் பிடித்தலையும் பேதையே! உண்மை உணராது என்னைக் க்டிவதா? எடு கத்தியை; பார்க் கலாம்!" என்றான் வீர இளைஞன்.

இருவருக்கும் வாட்போர் மூண்டது. மும்முரமாகச் சண்டை செய்தனர். இறுதியில் இருவரும் மாய்ந்து வீழ்ந்தனர்.

இளமங்கையைக் காணவில்லை. அவள் இருந்த இடத்தில் இருந்து தாடி நரைத்த கிழவன் ஒருவன் தடியை ஊன்றிக்கொண்டு எழுந்து நின்றான். இவ் வளவையும் பார்த்துக்கொண்டிருந்த நம் முதியோனுக்கு இப்பொழுது அச்சம் நீங்கிவிட்டது; வியப்பும் பறந்து விட்டது. நேரே மாயக்கிழவனிடம் சென்றான்; அவன் தாடியை வலுவாகப் பிடித்தசைத்து, "நீர் யார்?" செல்லுமிடமெல்லாம் பிணக்காடாக்குகிறீரே? இன்றும் நேற்றும் இறந்த எண்ணற்ற மக்கள் உமக்கு என்ன தீங்கு இழைத்தனர்?" என்று துடிதுடிப்புடன் கேட்டான்.

"நானா? என்னைக் காலனென்பார்கள், கூற்றுவன் என்பார்கள். நான் சாவின் கடவுள். நீர் நேற்றும் இன்றும் பார்த்தவர்களுக்கெல்லாம் காலம் முடிந்துவிட்டது. அவர்கள் உயிர்களைக் கவர்ந்தேன். என் வேலையைச் செய்தேன். அவ்வளவுதான்" என்றான் மறலி.

"அப்படியானால் என் உயிரையும் கவர்ந்துகொள்ளும். நான் இவ்வுலகில் அல்லல் பட்டுப்பட்டு அலுத்துப் போனேன். சாவே இன்பம் பயக்கும் என்று நினைக்கிறேன்," என்று வணக்கமுடன் கூறினான் நம் கிழவன். "அதுதான் முடியாது. உம் காலம் முடிய இன்னும் பத்து ஆண்டுகள் உள்ளன. அதற்குமுன் உம்மைக் கொண்டு செல்லல் முடியாது. காலம் முடிந்தவர்களை இவ்வுலகில் ஒரு நொடிப்பொழுதும் தங்கவிடேன். காலம் முடியாதவர்களை ஒரு நொடிப்பொழுதிற்கு முன்கூடக் கொண்டு செல்ல ஒருப்படேன். காலம் தவறிக் காலன் ஒருநாளும் நடவான்" என்று கூறிய இயமன் இமைப் பொழுதில் மறைந்தான். ஏமாற்றமுற்ற கிழவன் தன் வழியே சென்றான்.

---

௯. வில்லோமரத் தெய்வம்

(ஒரு ஜப்பான் நாட்டுச் சிறுகதை)

பண்டைக்காலத்தில் மக்களெல்லோரும் இயற்கையிலேயே கடவுளைக் கண்டு வழிபட்டு வந்தனர்; படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளிலும் கடவுள் அதற்குரிய தெய்வமாகவே உள்ளுறைந்து உடன் வாழ்வதாக நம்பினர். மலைக்கொரு தெய்வம், மரத்திற்கொரு தெய்வம், கலைக்கு ஒரு தெய்வம், கடலுக்கொரு தெய்வம், கல்லிலும் தெய்வம், கனவிலும் தெய்வம், தூணிலும் தெய்வம், துரும்பிலும் தெய்வம் என்று கொண்ட பழங்கொள்கை நம் நாட்டில்மட்டுமே யன்றிப் பிறநாட்டிலும் பரவியிருந்து வந்துள்ளது. கீழ்வரும் கதை அக்கொள்கை ஜப்பான் நாட்டிலும் பரவியிருந்து வந்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

ஜப்பான் நாட்டில் உள்ளது கியோட்டோ என்னும் நகரம். அதன் அருகே இருந்த சிற்றூர் ஒன்றில் பெரியதொரு வில்லோ மரம் வளர்ந்திருந்தது. வில்லோ என்பது நம் நாட்டில் அலரி என்றழைக்கப்படும் மர வகையைச் சேர்ந்ததாகும். அது தேக்கு, கடம்பு முதலிய மரங்களைப் போலப் பருத்து உயர்ந்து வளர்வதொன்று. கப்பும், கிளையுமாய் அது கிளைத்துப் பரந்து இலைகள் நிறைந்து பலர்க்கிருக்க நிழல்தருவதாகும். இத்தன்மை வாய்ந்த இந்த வில்லோ மரத்தடிதான் அச்சிற்றூர்க் குழந்தைகளுக்கு விளையாட்டிடமாகும். மனம் போனபடி யெல்லாம் அவர்கள் அம்மரத்தின்மீது ஏறியும் தாவியும் ஆடி வருவார்கள். நடுப்பகல் வேளையில் பலர் அம் மரநிழலில் படுத்து அயர்ந்து உறங்குவதுண்டு. மாலை நேரங்களில் வேலை முடித்து வீடு திரும்பும் மக்கள்


பலர் அம் மரத்தடியில் சிறிது பொழுது தங்கி இளைப் பாறிச் செல்வர். பொதுவாகக் கூறுமிடத்து அவ்வூரின் நல்வாழ்க்கைக்கு உதவிய பல வசதிகளுள்ளும் இம் மரம் தலைசிறந்ததாகவே இருந்துவந்தது.

இம் மரமிருந்த இடத்திற்கு அருகில் பெரியதொரு மாடி வீடிருந்தது. அது பணக்காரக் குடியானவர் ஒருவர் வீடாகும். ஹெய்த்தாரோ என்ற பெயருள்ள அழகிய சிறுவனொருவன் அவ்வீட்டிலிருந்தான். காலையிலும், மாலையிலும் அவன் தன் பொழுதையெல்லாம் அம் மரத் தடியிலேயே கழிப்பது வழக்கம். அம்மரமே அவனுக்கு உயிர்.

ஹெய்த்தாரோவுக்கு ஆண்டுகள் இருபத்திரண்டு நிரம்பின. அவன் பெற்றோர் இறந்துவிட்டனர். தன் குடித்தனக் காரியங்களை அவனே நடத்தி வந்தான். அந்த நிலையில், அச்சிற்றூர் மக்கள் அவ்வூருக் கருகில் ஓடிய ஆற்றைக் கடக்கப் பாலமொன்று இடுவதென்று முடிவு செய்தனர்; அதற்கு இந்த வில்லோ மரத்தையே வெட்டிப் பயன்படுத்த வேண்டும் என்றும் பேசிக்கொண்டனர். இப் பேச்சு ஹெய்த்தாரோவின் காதுகளுக்கு எட்டிற்று. "ஆ! என் அருமை வில்லோ மரத்தையா?" என்று அவன் பெருமூச் செறிந்தான். அம்மரத்திற்கு வந்த தீங்கைத் தன் உயிர்க்கு வந்த தீங்காகவே கருதினன்; நெடுநேரம் கவலையில் ஆழ்ந்தான். மாறிமாறி என்னென்னவோ நினைத்தான். கடைசியில் அந்த மரத்தை வெட்ட விடுவதில்லை என்றும், அதற்கு மாருக, பாலம் கட்டி முடிப்பதற்கு வேண்டிய மரங்களையெல்லாம் தனக்குச் சொந்தமான காட்டிலிருந்தே வெட்டி அளிப்பதென்றும் முடிவுசெய்தான். அவ்வூர்ப் பெருமக்களிடம் அவன் தான் செய்துகொண்ட முடிவைத் தெரிவித்து, "இந்த வில்லோ மரத்தைமட்டும் அருள் கூர்ந்து எப்பொழுதும் வெட்டக் கருதவேண்டா," என்று

கேட்டுக்கொண்டான். உள்ளூற அம்மரத்தை வெட்டு வதில் விருப்பமில்லாத அவ்வூர் மக்களும் உடனே அதற் கிணங்கினர். ஆற்றிற்குப் பாலமும் போடப்பட்டது. ஹெய்த்தாரோ அளவில்லா மகிழ்ச்சி அடைந்தான்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் மாலை கை யெழுத்து மறையும் நேரம். ஹெய்த்தாரோ தன் வயல் களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீடு நோக்கி வந்துகொண் டிருந்தான்; வில்லோ மரத்திற்கருகே வந்துவிட்டான்.



அன்றைக்கென்று அம்மரத்தடியில் மக்கள் நடமாட்டமே காணப்படவில்லை. "ஆ! அதோ நிற்பது பெண்ணா! அணங்கா? ஆண்டுகள் பதினாறு அல்லது பதினேழு நிறைந்த தோற்றமுடையவளாய்க் காணப்படுகின்றாளே! பெண்ணானால் அந்நேரவேளையில் அவள் தனியாக அம் மரத்தடியில் நிற்பானேன்? இவ்வூரைச் சேர்ந்தவளாக வும் தோன்றவில்லையே!" என்று வியப்பும் ஐயமும் கொண்டவனாய் ஹெய்த்தாரோ மெல்ல அம் மரத்

தடியை நெருங்கினன். அழகே உருவாய்த் திரண்டிருந்த அந்நங்கை அவன் வருகையைக் கண்டு நாணினவள் போல், தலைகுனிந்து, தன் கடைக்கண்களால் அவனை மெல்ல நோக்கினள். ஹெய்த்தாரோ அந்நாட்டு வழக்கப்படி அவளுக்கு வணக்கம் செலுத்தினன்; அவளும் தன் வணக்கத்தைத் தெரிவித்தாள். ஒருவரையொருவர் அறியாமல், அவர்கள் இருவர் மனமும் உட்கலந்தன. சட்டென்று அவள் தான் போய்வருவதாகக் கூறிச் சென்றுவிட்டாள். வீடு சேர்ந்த ஹெய்த்தாரோவுக்கு அன்றிரவு முழுவதும் தூக்கம் பிடிக்கவில்லை. "அந்நங்கை யார்? அன்றுவரை பார்த்திராத அவள் இந்த மரத்தடியில் வந்திருப்பானேன்? மீண்டும் ஒருமுறை அவளை நான் காண்பேனே?" என்றெல்லாம் நினைத்து நினைத்து அவன் மனம் கலங்கினன்.

மறுநாள் பொழுது விடிந்தது. அவளைப்பற்றிய நினைவுகளை அடியோடே மறந்துவிடுவது என்று நினைத்தவனாய், ஹெய்த்தாரோ விரைந்து தன் வேலைமேற் சென்றான்; என்றுமில்லாதபடி முனைந்து முனைந்து தன் வேலைகளைச் செய்தான். வேலைகள் முடிந்தன. வீடு நோக்கிப் புறப்பட்டான். மங்கையின் நினைவுமுற்பட்டது! விரைந்து மரத்தடிக்கு வந்தான். பொழுது சாய்ந்து இருள்கவியும் நேரம் ஆய்விட்ட படியால், அன்றும் மரத்தடியில் ஒருவரும் தென்படவில்லை. ஆனால், அம்மங்கை மட்டும் முதல்நாள் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருப்பதை அவன் கண்டான். "வரவேண்டும், நண்பரே! தங்கள் வரவைத்தான் எதிர்பார்த்து நிற்கின்றேன். வாருங்கள்! இம்மரத்தடியில் சற்று உட்காரலாம். உங்கள் களைப்பும் தீரட்டும்," என்று எதிர்பாராத வகையில் அம்மங்கை இவனை நோக்கி எதிர்வந்து கூறினள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. ஹெய்த்தாரோ தன்னுடைய உண்மையான தூய நற் காதலைத்

தெரிவித்தான். அம்மங்கையும் அன்பு நிறைந்த புன் முறுவலுடன் தான் அதை ஏற்றுக்கொண்டதாகக் குறிப்புக் காட்டினாள். அன்று முதல் ஒவ்வொரு நாளும் அவர்கள் இருவரும் அம் மரத்தடியில் வந்து பேசி மகிழ்ந்துவந்தார்கள்.

"இவ்வாறே எத்தனை நாள் கழிப்பது? ஏன் என்னை நீ மணம் புரிந்துகொள்ளக் கூடாது," என்றான் அழகன்.

"தடையொன்றுமில்லை. ஆனால், என் பெற்றோர்களைப் பற்றியோ, உற்றார் உறவினர்களைப் பற்றியோ தாங்கள் என்னை எக்காலத்திலும் எத்தகைய கேள்வியும் கேட்கக் கூடாது. தங்களை நான் மனமாரக் காதலிக்கிறேன். என் உடலையும் உயிரையும் தங்களுக்கே ஒப்படைக்கிறேன். எவ்வகையிலும் தங்களுக்கு ஏற்ற மாண்புடைய மனைவியாக இருந்து வருவேன். தாங்கள் இதற்கு ஒப்புக்கொண்டு என்னை ஏற்றுக்கொண்டால், ஹிகோவென்று என்னை அழையுங்கள்," என்று கூறினாள் அழகி.

மறுநாள் ஹெய்த்தாரோவின் வீடு மணவீடாகத் திகழ்ந்தது. மகிழ்ச்சிக்கடலின் கரை கண்டவன்போல் ஹெய்த்தாரோ தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். ஓராண்டு முடிந்ததும் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சியோடோ என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டனர். மங்கலம் நிறைந்த மனைவியும், ஒப்பற்ற குழந்தையும் கடவுளருளால் வாய்க்கப்பெற்ற ஹெய்த்தாரோவின் வாழ்க்கை இணையற்ற இன்ப வாழ்க்கையாகவே நடந்துவந்தது.

அந்தோ! எத்தனை நாள் இவ்வாழ்க்கை? துன்பங் கலவாத இன்ப வாழ்க்கை என்பது உலகிலுண்டோ? ஹெய்த்தாரோவின் இன்ப வாழ்க்கைக்கும் பேரிடர் ஒன்று வந்துற்றது!

சியோடோவிற்கு ஆண்டுகள் ஐந்து நிரம்பின. அப்பொழுது கியோட்டோ நகர முடிமன்னனுன டோபா அருள் அன்னைக்கு மாபெருங் கோயிலொன்று * கட்ட வேண்டுமென்றும், அதற்கு ஊரிலுள்ள பெரிய மரங்களை யெல்லாம் வெட்டிக் கொண்டுவர வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தான். ஐயோ! வில்லோ மரத்தின் முடிவுநாள் நெருங்கிவிட்டது. அரசன் ஆணைக்கு எதிர் ஆணை உண்டோ? எவ்வளவு முயன்ருலும் உயிருக்கு உயிரான வில்லோ மரத்தை இந்தத் தடவை தான் காப்பாற்ற முடியாது என்று ஹெய்த்தாரோ கண்டுகொண்டான். அருள் அன்னையின் கோயிலுக்கு அம் மரமும் உதவுவதானுல் அதைவிடச் சிறந்ததொரு பேறும் கிடைக்குமோ வென்பது அவ்வூரார் கருத்தாகும் என்பதும் அவனுக்குத் தெரியும். செயலற்றவனுய் ஹெய்த்தாரோ மனங்கலங்கி இருந்தான்.

மரத்தை வெட்டும் நாள் வந்துவிட்டது. அன்றிரவு அழகிற் சிறந்த தன் மனைவியுடனும் அருமந்த மகனுடனும் உறங்கிக் கொண்டிருந்த ஹெய்த்தாரோவின் காதுகளில் வில்லோ மரம் வெட்டப்படும் கோடரி ஓசை வீழ்ந்தது. திடுக்கிட்டு அவன் தன் கண்களை விழித்துப் பார்த்தான்; உறங்கிக் கிடந்த தன் மனைவி எழுந்து உட்கார்ந்து கண்களில் நீர் பெருக அன்புடன் தன்னை நோக்கி விம்மி விம்மி அழுதுகொண்டிருக்கக் கண்டான்.

“ கண்ணே ! ஏன் என்ன ?”

“என் அன்புக்கனியே, நான் சொல்வதை, அருள் கூர்ந்து கேளுங்கள், ஐயுற வேண்டா. கனவைப்போலத் தோற்றக்கூடிய இது கனவன்று: நனவே தான்.

* “ சன்-ஜு-சன்-ஜென்டோ ” என்பது அக்கோயிலின் பெயர். அதனுள் அருள் அன்னைக்கு 33,333 தெய்வச் சிலைகள் உள்ளனவாம்.

தங்களை மணந்துகொண்ட காலத்தில் என் வரலாற்றைப் பற்றி ஒரு கேள்வியும் கேட்கக் கூடாதென்று நான் தங்களைக் கேட்டுக்கொண்டேனன்றோ? அதன்படி தாங்களும் இதுவரை என்னைப்பற்றி ஒன்றுங் கேட்காமலே இருந்து வந்தீர்கள். இன்று நானாகவே என் வரலாற்றைத் தங்களுக்குக் கூறும் காலம் வந்துவிட்டது. தாங்கள் உயிருக்குயிராய் நேசித்து வந்த வில்லோ மரத்தின் உள்ளுறை தெய்வமே நான். ஆறு ஆண்டுகட்கு முன் ஊரார் என்னை வெட்டி விடாதபடி தாங்கள் பரிந்து முன்வந்து என்னைக் காப்பாற்றினீர்கள். அந்தப் பேரன்புக்குக் கைம்மாறாகவே நான் மனித உருவத்தில் தோன்றித் தங்களை மணந்து நல் வாழ்க்கை நடத்தி வந்தேன். தங்கள் ஆயுட்கால முழுதும் இவ்வாறாகவே தங்களுக்கு இன்பமளிக்கலாம் என்று நான் நம்பியிருந்தேன். ஆனால் எல்லாம்வல்ல இறைவன் திருவுளம் வேறாக இருந்தது. அதோ! அவர்கள் வெட்டுகிற வெட்டு ஒவ்வொன்றும் என் இடுப்பில் விழுகின்றது. என் நரம்புகள் தளர்வுறுகின்றன. கண்ணனைய என் குழந்தை சியோடோவை நான் எவ்வாறு மறப்பேன்? தாயற்ற குழந்தை தான் என்று தெரிந்ததும் அவன் அலறித் துடிப்பானே! ஆ! இறைவனே! அதை நான் எவ்வாறு பொறுப்பேன்? காதல! குழந்தையை அழாது பார்த்துக் கொள்ளுங்கள். வீணில் வருந்த வேண்டா! தாங்களும் நானும் கொடுத்து வைத்தது இவ்வளவுதான் என்று நினைத்துக்கொள்ளுங்கள்! ஒப்பற்ற நம் காதற்கனியான சியோடோவை உங்களிடம் ஒப்படைத்துச் செல்லுகிறேன். என் உடலுருவம் மறைந்தாலும் என் ஆவி தங்களிடமே இருக்கும். இனி நான் இருக்க முடியாது. சென்று வருகிறேன். காதல!"

ஹெய்த்தாரோ குழந்தையை எழுப்பினன். குழந்தை எழுவதற்குள் ஹீகோ மறைந்தாள். தாயை

நினைந்து நினைந்து சியோடோ அலறி அழுதான். துக்கம் நெஞ்சடைக்க ஹெய்த்தாரோவும் முதலில் வாய்விட்டலறினான்; பிறகு, சற்றுத்தேறினவனாய்க் குழந்தையை ஓயப்படுத்தினான்.

பொழுது விடிந்ததும் சியோடோவை அழைத்துக் கொண்டு ஹெய்த்தாரோ வில்லோ மரத்தடிக்குச் சென்றான். மரமிருந்த இடம் வெறுமையாக இருந்தது. மரம் வெட்டுண்டு கிளைகளெல்லாம் கழிக்கப்பட்டுக் கீழே கிடந்தது. அதை நேரிற் கண்ட ஹெய்த்தாரோவின் மனநிலையைக் கூறவும் வேண்டுமோ!

என்ன விந்தை! நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்து தள்ளியும், வெட்டுண்டு கிடந்த அம் மரம் ஒரு சிறிதும் நகரவில்லையே! அதைக் கியோட்டோவுக்குக் கொண்டு செல்லுவதெப்படி? ஹெய்த்தாரோவின் மனதில் சட்டென்று ஓர் எண்ணம் உதித்தது. "நண்பர்களே வெட்டுண்ட அம் மரம் என் மனைவியின் ஆவியாகும். என்னுடைய சிறுமகன், தங்களுக்கு உதவி செய்யத் தாங்கள் சம்மதித்தால் ஒரு வேளை அந்த மரம் நகரக் கூடும்" என்று அவன் கூறினான். மரம் வெட்டியவர்களும் ஒத்துக்கொண்டார்கள். சிறுவன் சியோடோ தன் சிறு கையை மரத்தின்மேல் வைத்தான். அவ்வளவுதான் அம்மரம் விரைவாக ஆற்றை நோக்கி நகர்ந்து சென்றது! கண்டோர் திகைத்தனர். ஹெய்த்தாரோ நன்றியறிதலுடன் தன் மகனை அழைத்துக் கொண்டு வீடு சேர்ந்தான்.

———

௪. சீனச்சிறுவன் வூ

[ஒரு சீன நாட்டுச் சிறுகதை]

ஆண்டுகள் பதின்மூன்றுதான்; உருவிலும் சிறியவனே; அகன்று பரந்திருந்த அவன் கண்கள் எப்பொழுதும் அவன் ஏதோ ஆழ்ந்த நினைவில் இருப்பதைத் தெரிவித்தன. அவன் தன்னந்தனியே உலாவுவான். அவனுடன் துணை செல்ல எவருமில்லை.

வூ இருந்தது ஒரு பெரிய பள்ளத்தாக்கு. பெரியதொரு மலைச்சாரலிலிருந்த அவ்விடத்தில் மலையருவிகள் பல ஓடிக்கொண்டிருந்தன. அப் பள்ளத்தாக்கின் தென் மூலையில் ஒரே ஒரு சிறிய வீடு. அதுவே சிறுவன் வூவின் வீடு வூவிற்குத் தாயில்லை; இறந்து பல ஆண்டுகளாயின. யீன் என்னும் அவன் தந்தையும், தந்தையைப் பெற்ற பாட்டியுமே அந்த வீட்டிலிருந்தனர். பாட்டி மிகவும் வயது சென்றவள், எனினும் அறிவில் மிகுந்தவள். பிள்ளைப் பருவத்திலிருந்தே தான் வளர்த்துவந்த வூ விற்குத் தனக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் அவள் புகட்டி வந்தாள்; தான் சொல்லிக் கொடுக்கும் எதையும் ஒருவருக்கும் அவன் தெரிவிக்கக் கூடாது என்று அவள் சொல்லி வைத்திருந்தாள். சொல்லியவாறே வூவும் நடந்து கொண்டான்.

வீட்டைச் சுற்றி வயல்கள் பல இருந்தன; எல்லாம் யீனுக்குச் சொந்தமானவையே, அவற்றில் வேலைக்காரர்கள் பலரிருந்தனர். அவர்களில் ஒருவரேனும் வூவைப் பார்த்து வியவாதவரில்லை. “ஊமை வூ” என்றே அவர்கள் அவனை அழைப்பார்கள். “என்ன விந்தை! யார் என்ன சொன்னாலும் கேட்டுக்கொள்ளுகிறானே ஒழிய ஒருவருக்கும் அவன் பதில் சொல்வதில்லையே! ஓர் அணு

வும் அவனது ஊடுருவும் பார்வையிலிருந்து தப்புவதில்லை, எதைப்பற்றியும் ஆழ்ந்து கருதுகிறான். நாளா வட்டத்தில் அவன் பெரிய அறிஞன் ஆவான் என்பது திண்ணம்,'' என்று அவர்கள் பேசிக்கொள்வார்கள்.

ஒரு நாள் விடியற் காலையில் வூ தன் வீட்டு வாயிற்படியில் உட்கார்ந்திருந்தான். சூரியன் புறப்படும் வேளை. அப்பொழுது கீழ்த்திசை வானத்தில் அவனுக்கொரு



காட்சி புலப்பட்டது: அழகிற் சிறந்த இளைஞன் ஒருவன் தூய வெண்ணிறக் குதிரைமீது வந்துகொண்டிருந்தான். அவன் மஞ்சள் நிறமான பொன்னுடை அணிந்திருந்தான். அவனைத் தொடர்ந்து நான்கு வேலைக்காரர்கள் வந்துகொண்டிருந்தனர். அவருள் ஒருவன் வெண்கொற்றக் குடையைத் தாங்கி வந்தான். ஐவரும் வூ இருந்த இடம் வந்து சேர்ந்தனர். இளைஞன் குதிரையை நிறுத்தினன்; "யீனின் மகனே, நான் களைத்திருக்கிறேன்; உன் தந்தையின் வீட்டில் சிறிது நேரம் தங்கிப் போகலாம் என்று வந்தேன்,'' என்றான்.

"தாராளமாக உள்ளே செல்லுங்கள்" என்று வணங்கிப் பதிலளித்தான் வூ.

இளைஞன் உரையும் வூவின் விடையும் உள்ளிருந்த அவன் தந்தை யீனின் காதில் விழுந்தன. உடனே அவன் வெளியில் வந்து இளைஞனுக்கு முகமன் கூறி வீட்டிற்குள் அவனை அழைத்துச் சென்றான். அங்கிருந்த கட்டிலொன்றின்மீது இளைஞன் காலை நீட்டிப் படுத்துக்கொண்டான். அவன் வேலைக்காரர்கள் நால் வரும் குதிரையை மூலையொன்றில் கட்டிவிட்டு முற்றத்தில் உட்கார்ந்துகொண்டனர். யீனும் அவர்களுடன் உட்கார்ந்து வாயாடிக் கொண்டிருந்தான். வூ மட்டும் தான் இருந்த இடத்திலிருந்தே இவர்களை உற்று நோக்கிய வண்ணம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

சற்று நேரம் கழிந்ததும் இளைஞன் கட்டிலைவிட்டு எழுந்தான்; தான் புறப்படப் போவதை அறிவித்தான். யீன் மிகவும் பரிந்தழைத்து இளைஞனுக்கும் அவன் வேலைக்காரர்களுக்கும் நல்லுணவளித்தான். உணவு உண்டு முடிந்ததும் இளைஞன் வேலைக்காரர்களில் ஒருவன் வெண் கொற்றக் குடையை தலைகீழாகத் திருப்பிச் சற்று நேரம் பிடித்ததை வூ மட்டும் கவனித்தான். வேலைக்காரர்கள் முற்றத்தை விட்டு வெளியேறினர். இளைஞனும் யீனுக்கு நன்றி செலுத்திவிட்டு வெளியே வந்து குதிரைமேல் ஏறினான். குதிரை புறப்பட்டது; சட்டென இளைஞன் வூவைத் திரும்பிப் பார்த்து, "மறுபடியும் நாளை வருகிறேன்," என்றான்.

"தாராளமாக வாருங்கள்," என்று பதிலளித்தான் வூ.

இளைஞனும் மற்றவர்களும் மேற்கு நோக்கிச் சென்றனர். கண் மறைகிற வரையில் அவர்களை வூ பார்த்துக் கொண்டிருந்தான்.

அன்று மாலை யீனும் வூவும் உணவருந்த உட்கார்ந்தனர். "வந்த விருந்தினர்கள் யாரென்று தெரியவில்லையே! என்னுடைய பெயரை மட்டும் அவ் விளைஞன் எவ்வாறோ தெரிந்து கொண்டிருக்கிறான். ஆனால் இன்று வரை அவனை நான் பார்த்ததில்லை," என்றான் யீன்.

சற்று நேரம் வூ பதிலளிக்கவில்லை; பிறகு "அவர்கள் யாரென்று நான் கூற முடியாது," என்றான்.

யீன் :—நீ அவர்களை விடாமல் உற்று நோக்கிக் கொண்டிருந்ததை நான் கவனித்தேன். உன் பார்வைக்கு ஒன்றும் தப்புவதில்லை அவர்களிடம் புதுமைகள் ஏதேனும் கண்டாயோ?"

வூ :—அவர்கள் ஆடைகளில் தையல்களில்லை.

யீன் :—அட! அதை நான் பார்க்கவில்லை இன்னும் ஏதேனும் கண்டாயோ?

வூ :—அந்த வெண்ணிறக் குதிரை ஐந்து நிறமான புள்ளிகள் பாய்ந்தது. அதன் உடலெல்லாம் செதில்கள் அடர்ந்திருந்தன; மயிர்களில்லை.

யீன் :—விந்தையிலும் விந்தையே! இன்னும் ஏதேனும் கண்டாயோ?

வூ :—அவர்கள் புறப்பட்டுச் சென்ற பொழுது குதிரையின் குளம்புகள் தரையில் படவில்லை, வேலைக்காரர்களின் கால்களும் தரையின்மீது படவில்லை.

யீன் :—அப்படியானல் அவர்கள் மனிதர்களல்லர், தேவர்களே!

வூ :—மேற்கு நோக்கி அவர்கள் செல்லும்பொழுது நான் நன்கு கவனித்தேன். வானத்தில் மேகங்கள் கருக்கொண்டன. அவர்கள் மெள்ள மெள்ள மேலேறி மழை மேகங்களுள் மறைவதைக் கண்டேன்.

யீன் :—நீ கூறுவது எனக்கு ஏதோ அச்சத்தை விளைவிக்கிறது உன் பாட்டியைக் கேட்டு இதன் பொருள் என்ன என்பதை அறிய வேண்டும்.

கிழவி ஒரு சிற்றறையில் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள். யீன் அவளை எழுப்பினான். அவளும் எழுந்து உட்கார்ந்தாள். அவள் படு செவிடு; ஆதலால் அவள் காதுகளில் தான் கேட்டவற்றை யெல்லாம் உரக்கச் சொன்னான் யீன். கிழவியும் பின்வருமாறு விடையளித்தாள் :

" ஐந்நிறம் படைத்த வெண்ணிறக் குதிரை பொன்னுலகக் குதிரையே. பொன்னுலகக் குதிரைகளுக்குச் செதில்கள்தான் இருக்கும்; மயிர் இருக்காது. தேவர்கள் மக்களுருத் தாங்கி மண்மேல் வரும்பொழுது தையலில்லா ஆடைகளையே அணிந்து வருவார்கள். அதனல் தான் அவர்களுடைய ஆடைகளில் தையல்களில்லை. தேவர்கள் காற்றில் நடப்பவர்கள்; அவர்களுடைய கால்கள் தரையில் பாவவில்லை என்று வூ சொன்னான்; அது சரியே. மேற்கு நோக்கிச் செல்லச் செல்ல அவர்கள் மேலேறிச் சென்றனர் என்றான்; மழை மேகங்களை நோக்கிப் போய்க்கொண்டிருந்ததனாலேயே அவ்வாறு சென்றனர். விண்ணில் ஏற நினைக்கும்பொழுதெல்லாம் அவர்கள் மேற்கு நோக்கியே செல்லுவார்கள். இளைஞன் பொன்னித் தெய்வம். காற்றும் மழையும் சேர்ந்த கடு மழையை வரச் செய்யவே அவன் மேற்கு நோக்கிச் சென்றான். நான்கு பேர்கள் பின் தொடரச் சென்றபடியால் வரும் புயல் பெரும் புயலாகவே இருக்கும். நமக்கு ஒன்றும் கெடுதி நேரிடாதபடி கடவுள் காப்பாராக !"

யீன் :—வீட்டை விட்டு வெளியேறுமுன் அவர்களில் ஒருவன் வெண் கொற்றக் குடையைச் சற்று

நேரம் திருப்பிப் பிடித்திருந்ததாக வூ கூறினன். நான் பார்க்கவில்லே.

கிழவி :—அதுவும் நற்காலத்திற்கு ஓர் அறிகுறியே! இவ்வாறு உரைத்த கிழவி சட்டென்று கீழே படுத்துக் கண்ணே மூடிக் கொண்டாள்; "தூக்கம் கண்களே அழுத்துகின்றது; வயதோ ஆய் விட்டது" என்று கூறிய வண்ணம் உறங்கி விட்டாள்.

யீன் மேற்புறச் சுவரிலிருந்த சாளரம் ஒன்றின் அருகே சென்று பார்த்தான். மேற்றிசை வானம் கறுத்துச் சூல்கொண்டிருந்தது. "நான் இன்று படுத்து உறங்கப் போவதில்லே," என்று கூறி அருகே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். "நானும் தங்களுடன் விழித்துக்கொண்டிருப்பேன்," என்று வூ மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான்.

காரிருள் விரைவில் சூழ்ந்து கொண்டது. மருந்திற்குக்கூட ஒரு விண்மீன் புலப்படவில்லே. நாழிகைக்கொரு முறை யீன் கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்தான். எங்கும் ஒரே கும்பிருட்டு! இரவுப் பொழுது விரைவில் கழிவதாக இல்லே; ஆனல், தந்தையும் மகனும் உறங்க நினைக்கவுமில்லே. வூ ஒரு மஞ்சள் நிற விளக்கை ஏற்றிக்கொண்டான்; தன் பாட்டியார் தனக்குத் தைத்துக்கொடுத்த ஒரு மஞ்சள் நிற அங்கியை அணிந்து கொண்டான்; சாம்பிராணிப் புகை போட்டான். மஞ்சள் நிறப் புத்தகம் ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு தாழ்ந்த குரலில் ஏதோ மந்திரங்களேப் படித்துக்கொண்டிருந்தான்.

பொழுது புலரும் நேரம். பேரிடியிடித்துப் பெரியதோர் ஓசை கேட்டது; மழை பெய்யத் தொடங்கிற்று. "கடும்புயல் தொடங்கிவிட்டது," என்ருன் யீன். வூ ஒன்றும் பதிலளிக்கவில்லே; புத்தகத்தை மூடி வைத்து

விட்டு, திறந்திருந்த சாளரம் ஒன்றின்மீது போய் உட்கார்ந்து கொண்டான்; மழை பெய்வதையும் பொழுது புலருவதையும் நோக்கிக் கொண்டிருந்தான்.

பொழுதும் புலர்ந்தது. மழையும் மிகுந்தது. மலையருவிகளெல்லாம் பொங்கித் ததும்பிக் கரை புரண்டோடின. வயல்களெல்லாம் வெள்ளத்தால் மூடுண்டன. இடையிடையே தோன்றிய சிறு மேட்டு நிலங்களில் ஆடு மாடுகள் நின்று தவித்துக்கொண்டிருந்தன. மழை, மழை, ஓயாப் பெருமழை!

யீன் :—அட கடவுளே! நமக்கெல்லாம் காலம் நெருங்கி விட்டதுபோலும்! புயல் தொடங்குமுன் மலை மீது ஏறிக்கொள்ளாமல் போய் விட்டோமே.

வூ :—பாட்டி?

யீன் :—ஆம்; பாட்டியை மறந்தேன். நீயும் நானும் மலைமீது ஏறிக்கொள்ளலாம்; மலைமீதுள்ள குளிரை அவள் தாங்கமாட்டாள்தான்.

வூ மீண்டும் வெளியே பார்த்தான். மரங்களும் செடிகளும் வேரோடு பறிக்கப்பட்டு வெள்ளத்தில் வந்து கொண்டிருந்தன. வெள்ளமோ வரவரக் கடல்போல் பெருகி வந்தது. வயல்கள், வரப்புகள் எல்லாம் மறைந்து விட்டன. வீட்டின் சுற்றுப் புறமெல்லாம் வெள்ளம், வெள்ளம், பெரு வெள்ளம்!

"இனி, நாம் தப்ப முடியாது" என்றான் யீன். வூ ஒன்றும் பதிலுரைக்கவில்லை, மழையினூடே வானத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தான்.

யீன் :—நீ என்ன பார்க்கிறாய்?

வூ :—அவர்களில் ஒருவன் நேற்று வெண் கொற்றக் குடையைச் சற்று நேரம் திருப்பிப் பிடித்தான்.

யீன் :—ஆம்; அதைத்தான் முன்னமே சொன்னாயே.

வூ :—இளைஞன் புறப்படுமுன் "மறுபடியும் நாளை வருகிறேன்," என்று கூறிச் சென்றான்.

யீன் :—அதையுந்தான் முன்னரே உரைத்தாய். இளைஞன்தான் சொன்னதைச் செய்து விட்டான். பாட்டி கூறியதிலிருந்து இதோ அவனே இடியும், புயலும், மழையும், வெள்ளமுமாக வந்து விட்டானே! வெள்ளம் ஏறிக்கொண்டே வருகிறது. விரைவில் நம் வீடும் முழுகிவிடும். எல்லோரும் அழிய வேண்டியது தான்!" என்று கூறிய யீன் கீழே உட்கார்ந்து தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழத் தொடங்கினான்.

வூ :—அத் தெய்வ இளைஞனை நான் இப்பொழுது பார்த்தேன்.

யீன் :—என்ன! என்ன! என்ன பார்த்தாய்?

வூ :—நான் மேலே நோக்கிக் கொண்டிருந்தேன்; அந்த இளைஞன் நம் வீட்டின் மேல் வந்து தன் மேலங்கியை விரித்துப் பிடித்தான்; அவன் இப்பொழுது நம்மைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறான்.

யீன் —மகனே! நீ கனவு காண்கிறாயோ?

வூ :—சற்று உற்றுக் கவனியுங்கள்! நம் வீட்டுக் கூரைமீது மழைத்துளி விழுகின்றதா?

யீன் :—ஆம்! வீட்டின்மீது மழைத்துளி ஒன்று கூட விழத்தான் இல்லை; இதுவும் வியப்பே!

வூ :—நேற்று நம் வீட்டிற்கு வந்த இளைஞனை முகமன் கூறி உள்ளழைத்து உணவளித்ததும் நல்லதே!

யீன் :—அவன் உன்னிடந்தான் முதலில் பேசி

ஞன். நீதான் "தாராளமாக உள்ளே செல்லுங்கள்," என்று கூறினாய்.

ஆ:—விரைவில் புயல் ஓய்ந்து விடும்.

யீன்:—உனக்கெப்படித் தெரியும்?

ஆ:—தான் மீண்டும் திரும்பி வருவதாக அத் தெய்வ இளைஞன் கூறினனல்லனே?

யீன்:—ஆம்! ஆம்! அவன் விரைவில் திரும்பி வரட்டும்!

ஆ:—தந்தையே, சற்று நேரம் படுத்துக் கொள்ளுங்கள்! இரவு முழுவதும் தூங்கவேயில்லை. காலத்தில் நான் உங்களை எழுப்பி விடுவேன்.

யீன்:—அப்படியே ஆகட்டும்.

என்று கூறித் தன் அறைக்குட் சென்று படுக்கையில் படுத்து அயர்ந்து உறங்கிவிட்டான்.

புயல் ஓயவில்லை; சீறிச் சீறி அடித்துக்கொண்டேயிருந்தது. மலை யருவிகள் பேராறுகள்போலத் தோன்றின; வயல்களெங்கும் இரண்டு ஆள் மூன்று ஆள் மட்டத்திற்குமேல் வெள்ளம் நிறைந்து விட்டது. ஆடு மாடுகள் பல இறந்தன. மரங்கள் கணக்கின்றி அடித்துக்கொண்டு போகப்பட்டன. பாழ்! பாழ்! பெரும் பாழ்! பார்க்குமிடம் எல்லாம் வெறும் பாழாய்த் தெரிந்தது. பள்ளத்தாக்கின் வடமேற்குக் கோடியில் இருந்த சிற்றூர் மக்களில் பலர் இறந்தனர்; வீடுகள் பல இடிந்து விழுந்து பாழாயின. ஆனல், தென்கோடியில் இருந்த யீனின் வீடு எத்தகைய கெடுதியுமின்றி நின்றிருந்தது. அதன் கூரைமேல் ஒரு துளி மழைகூட விழவில்லை; அதைச் சுற்றிலும் வெள்ளம் கரைபுரண்டோடியது. ஆனல் அதன் அருகிலும் அதைச் சார்ந்த யீனுக்குச் சொந்தமான வயல்களிலும் ஒரு துளி நீர் கூடக் கிடையாது.

உச்சி வெடித்தது; மழையும் ஓய்ந்தது. தன் கதிர்களைப் பரப்பிப் பகலவன் வெளியே வந்தான். வூ உடனே வீட்டிற்கு வெளியே வந்து முன்போல் வாயிற் படியில் உட்கார்ந்து கொண்டான். சற்று நேரத்தில், வெண்ணிறக் குதிரைமீது தெய்வ இளைஞனும் அவனைத் தொடர்ந்து அவன் வேலைக்காரர்களும் வந்து கொண்டிருப்பதை அவன் கண்டான்; அவன் அருகே வரும் வரையில் அவர்களெல்லோரும் காற்றிலேயே வந்து கொண்டிருப்பதையுங் கண்டான். வீட்டினருகே வந்ததும் வேலைக்காரர்களும் இளைஞனும் தரைமட்டத்தில் இறங்கி வந்தனர். வூ உடனே எழுந்து இளைஞனுக்குப் பணிவுடன் வணக்கம் செலுத்தினன். இளைஞன் சற்று நேரம் அப்படியே நின்றுகொண்டிருந்தான்; பிறகு, "நான் திரும்பி வருவேன் என்று சொல்லவில்லையா?" என்று வூவைக் கேட்டான்.

வூ ஒன்றும் பதிலளியாது மீண்டும் வணங்கினன்.

இளைஞன்:—இம்முறை உன் வீட்டிற்குட் சென்று தங்க நான் விரும்பவில்லை.

வூ:—தங்கள் விருப்பம்.

இளைஞன் "இதோ இதை வைத்துக்கொள்! உன்னை நான் என்றும் மறவேன்," என்று கூறி, குதிரை கழுத்திலிருந்த செதில்களிலொன்றைப் பிய்த்து வூவினிடம் கொடுத்தான். பிறகு சிறுவனை வாழ்த்திவிட்டு இளைஞன் தன் வேலையாட்களுடன் சென்றுவிட்டான்.

செதிலைப்பெற்ற சிறுவன் அதனை ஒரு சிறு மரப் பெட்டியினுள் வைத்தான்; பிறகு உள்ளே சென்று தன் தந்தையை எழுப்பினன்; "புயலடித்து ஓய்ந்துவிட்டது; தெய்வ இளைஞனும் தன்னிடத்திற்குத்திரும்பினன்," என்று தந்தைக்கு உரைத்தான். யீன் மகிழ்ச்சியுடன் எழுந்து தன் மகனைத் தழுவிக்கொண்டான்; கிழவியிடம் சென்று நடந்ததை யெல்லாம் தெரிவித்தான்.

கிழவி உடனே வூவைக் கூப்பிட்டாள்; "திரும்பிச் சென்றபோது தெய்வ இளைஞன் உனக்கு ஏதேனும் கொடுத்தானா?" என்று கேட்டாள். ஒன்றும் பதிலுரையாமல், வூ, அச்சிறு மரப்பெட்டியைத் திறந்து காட்டினான். உள்ளே ஒளிர்ந்தது வெண்ணிறக் குதிரையின் பொன்னிறச் செதில்!

கிழவி:—வூ நீ விரைவில் அரசவை மெச்சும் சான்றோனாவாய்; உன்னை மன்னன் அழைக்கும் பொழுது இச்செதிலை அவனிடம் காண்பி! எல்லாம் நன்றாகும்!

யீன்:—மன்னனெதற்காக வூவை அழைக்க வேண்டும்?

கிழவி:—சற்றுப்பொறு, அறிவாய்!

வெள்ளம் நிறைந்த பள்ளத்தாக்கில் நிகழ்ந்த விந்தைகள் மன்னன் காதுகளுக்கு எட்டின. மலைமீது ஏறி உயிர் தப்பினவர்கள் மன்னனைக் கண்டு வெள்ளக் கொடுமையை விவரித்துக் கூறினர். அதனோடு யீனுடைய வீட்டின்மீது ஒரு துளி மழைகூட விழாததையும், அவனுடைய வயல்கள் வெள்ளத்தால் பாழ்படாமையையும் வியந்துரைத்தனர். வெள்ளமெல்லாம் வடிந்தபிறகு மன்னன் யீனுக்கு ஆளனுப்பினான். வியப்பு மேலிட்ட யீன் தன் மகன் வூவையும் அழைத்துக்கொண்டு உடனே அரண்மனைக்குச் சென்றான்.

மாலை வேளை. மன்னன் கொலுவில் அமர்ந்திருந்தான். அவனைச் சுற்றி அவனுடைய மந்திரிகள், மந்திரவாதிகள் பலரும் அமர்ந்திருந்தனர். யீனும் வூவும் உள்ளே நுழைந்தனர்; மண்டியிட்டு மன்னனைப் பணிந்தனர். பணிந்த அவர்களை மன்னன் எழுந்து இருக்கையில் அமரச் செய்தான்; அதன்பின், "இனி, புயலின் போது நடந்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் கூற வேண்டும்!" என்று கட்டளையிட்டான்.

யீனும் அவ்வாறே ஒன்றேனும் விடாமல் விளக்கிக் கூறினன். கூறி முடிந்ததும் மன்னன்,

" இளைஞன் உன் மகனுக்குக் கொடுத்த குதிரையின் சேதிலைக் காட்டு பார்க்கலாம்!" என்று கட்டளையிட்டான்.

சூரியன் மேற்றிசையில் மறையும் நேரம். மங்கலான வெளிச்சமட்டுமிருந்தது. அந்நேரம் வூ தன் சிறு மரப்பெட்டியைத் திறந்தான். எங்கும் பளிச்சிடும் வெளிச்சம்! கொலு மண்டபம் ஒளி மண்டபமாகத் திகழ்ந்தது!

மன்னன் முதலில் திகைத்து விட்டான். பின் ஒருவாறு தெளிந்து,

" உன் மகன் என் அரண்மனையிலேயே இருக்கட்டும். அரண்மனை மந்திரவாதிகளில் அவனும் ஒருவனுக இருந்து வருவான். பொன்னி இளைஞன் அவனுக்குப் பேராற்றலை அளித்துள்ளான்," என்று கூறினன்.

அந்நாட்டு மந்திரவாதிகளில் வூ மிகவும் தலை சிறந்து விளங்கினன். குதிரையின் சேதிலைக்கொண்டு விந்தைகள் பல அவன் நிகழ்த்தினன்; நோய்களை நீக்கினன்; பகைவர்களை ஒழித்தான்; பின் வரப்போவதை முன்னரே யறிந்து கூறினன். விரைவில் வூ பெருஞ் செல்வனனன். ஆற்றல் மிகுந்த அவனைக் கண்டு எல்லோரும் வணங்கி அன்பு செலுத்தினர். அரண்மனைக்கு அருகிலேயே அவனுக்குப் பெரிய மாளிகை ஒன்று கட்டிக் கொடுக்கப்பட்டது. அங்கே தன் பாட்டியுடனும், தன் தந்தையுடனும் அவன் சிறப்பாக நெடுநாள் வாழ்ந்து வந்தான்.

கழகச்

சிறு கதை நூல்கள்

கழகச் சிறு கதைகள்	முதற்புத்தகம்	....	அணா	4
,,	2-ம் புத்தகம்	....	,,	4
,,	3-ம் புத்தகம்	....	,,	4
,,	4-ம் புத்தகம்	....	,,	4
,,	5-ம் புத்தகம்	....	,,	4
,,	6-ம் புத்தகம்	....	,,	4
கழக இனிய கதைகள்	முதற் புத்தகம்	....	,,	5
,,	2-ம் புத்தகம்	....	,,	5
,,	3-ம் புத்தகம்	....	,,	5
தமிழ் நாட்டுச் சிறு கதைகள்		....	,,	5
விளையாட்டுப் பந்தயம்		....	,,	4
பழமொழிக் கதைகள்		....	,,	4
இளைஞர்க்கான இருசிறு கதைகள்		....	,,	3½
இளைஞர்க்கேற்ற இனிய கதைகள்		....	,,	4½
விலங்குகளின் அறிவுக் கதைகள்		....	,,	4½
சிறுவர்க்கான சிறு கதைகள்		....	,,	5½
பொன் கதைக் கொத்து		....	,,	5½
நாற் சிறு கதைகள்		....	,,	5½

கதைப் பாட்டு

பிறந்தநாட் பரிசு அணா 3   ஓர் எலிக் குடும்பம் அணா 3